பட்டு வளர்ப்புத் திட்டம் செயல்பட்டு வந்தது. தற்போது இந்த நிலம் அரசுக் கட்டுப்பாட்டில் இல்லை. மேலும் தனியார் குத்தகை நிலங்களில் அரசுப் பண்ணைகள் செயல்பட வேண்டாம் என்று கொள்கையளவில் முடிவு எடுத்த காரணத்தால், மேற்படி நத்தம் பட்டுப் பண்ணை 30—6—1990-க்குப் பின் நிலச் சொந்தக்காரரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

3. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு. (குறுக்கீடு).

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள் (குறுக்கீடுகள்). என்னுடைய அறையிலே வந்து நீங்கள் கேட்டீர்கள். உங்களுக்கு விளக்கம் சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடு). அப்போது என்னுடைய அறையில் வந்து நீங்கள் கேட்டிருக்க வேண்டியதே இல்லை. (குறுக்கீடு). உங்களுடைய கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் என்னுடைய பரிசீலனையில் இருக்கின்றன. இன்று இரண்டு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. துறையிலிருந்து பதில் வந்தவுடன் உங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படும். (குறுக்கீடுகள்). ஏறத்தாழ என்னிடத்தில் 100—130 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் இருக்கின்றன. 130 கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கும் நீங்கள் நாள் தோறும் நின்று கொண்டிருந்தால் அவையின் நடவடிக்கையை நடத்த முடியாது, உட்காருங்கள் (குறுக்கீடுகள்). அரசாங்கத்திடமிருந்து எனக்குப் பதில் வந்தவுடன் ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துக் கொண்டிருக்கிறேன். இன்றைக்கு இரண்டு முக்கிய கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடு). தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடு). நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் (குறுக்கீடு).

முற்பகல் 11-05.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரவாயில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பரவாயில்லை என்று சொல்வது சரியல்ல. (குறுக்கீடு) குமாரதாஸ் நடவடிக்கை எடுக்கவேண்டி வரும் (குறுக்கீடு) நடவடிக்கை எடுக்கவேண்டி வரும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நீங்கள் பேசுகிறபோது பேசலாம். (குறுக்கீடு) நான் இவ்வளவு சொன்னதற்குப் பிறகும் பேசுவது சரியல்ல. (குறுக்கீடு) என்னுடைய அறையிலே வந்து கேட்டபோது சொன்னேன் (குறுக்கீடுகள்). உங்கள் விருப்பத்திற்கேற்ப விதிகளைத் தளர்த்தி அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நாள்தோறும் கேள்வி நேரம் முடிந்தவுடன் இதேமாதிரி எடுத்தால் —100, 130 பேர் கொடுத்திருக்கிறார்கள் (குறுக்கீடுகள்) 100, 130 பேர்களும் இதே முறையில் எழுந்து சத்தமிடுவதை அனுமதிக்க முடியாது.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, 'சீரோ அவர்' . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எனக்கு ஒத்துழைக்க வேண்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பலரும் கவன ஈர்ப்புத்தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் ஒரு குறிப்பிட்ட பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை, 25,000 வீடுகளை இழந்த பிரச்சினை பற்றி எழுப்புகிற நேரத்தில் இந்த நாளில் எடுத்துக்கொள்கிறேன் என்று நீங்கள் சொல்வது கூட அவர்களுக்கு ஓரளவுக்கு திருப்தி அளிக்கக்கூடியதாக இருக்கும். அந்த மாவட்டத்திலிருந்து வந்திருக்கிற எம்.எல்.ஏ—க்கள் பெரிய அளவில் பதட்டம் அடைந்திருக்கிறார்கள். எனவே இந்தப் பிரச்சினையை எப்போது எடுத்துக்கொள்ளலாம், எப்போது எடுத்துக்கொள்வேன் என்று அறிவிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதாவது விதி 55-ன் கீழ் கொடுக்கப்பட்டிருக்கிற எல்லாப் பிரச்சினைகளிலும் இது தான் முக்கியமானது, மற்றவையெல்லாம் முக்கியம் அல்ல என்று கருத முடியாது. (குறுக்கீடு) தயவுசெய்து நான் சொல்வதைக் கேட்கவேண்டும். குமாரதாஸ், நீங்கள் கொடுத்ததுதான் முக்கியம் என்று சொன்னால் எப்படி? (குறுக்கீடு) அதேபோன்று

கன்னியாகுமரி மாவட்டப் பிரச்சினையைப் பற்றி கன்னியாகுமரி மாவட்ட மற்ற சட்டமன்ற உறுப்பினர்களும் கொடுத்திருப்பார்கள். (குறுக்கீடு) நான் பழையபடியும் விதிகளை நினைவுபடுத்தவேண்டியிருப்பதற்காக வருந்துகிறேன். ' (interruption) A member while speaking must not use his right of speech for the purpose of obstructing the procedings of the Assembly".

டாக்டர் தே. குமாரதாஸ் : விதியெல்லாம் சொல்லிக்கொண்டிருக்காதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி இல்லை என்றால் நீங்கள் யார்? நான் யார்? (குறுக்கீடு) விதி இருப்பதால்தான் நீங்கள் உறுப்பினர். நான் பேரவைத் தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விதி இல்லை என்றால் இந்த நேரத்தில் நீங்கள் எழுந்து நிற்பதற்கே உரிமை இல்லை. இந்த விதிகள்தான் (குறுக்கீடு) உங்களுக்கு உறுப்பினர் ஆகிற தகுதியையும் எனக்குச் சட்டமன்றப் பேரவைத் தலைவர் ஆக இருக்கிற உரிமையையும் கொடுத்திருக்கிறது.

டாக்டர் தே. குமாரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த விதிகளைப் பற்றிக் கவலை இல்லை என்று சொன்னால் நீங்கள் இருக்கவேண்டிய அவசியமே இல்லை. (குறுக்கீடு) இந்த விதிகளைப் பற்றிக் கவலை இல்லை என்று சொல்கிறபோது நீங்கள் இந்த அவையில் இருக்க வேண்டியதில்லை. (குறுக்கீடு) இந்த விதிகளைப் பற்றிக் கவலைப் படாத உறுப்பினர் இந்த அவையிலே இருக்க வேண்டியதில்லை. (குறுக்கீடு) தயவுசெய்து திரு. குமாரதாஸ் வெளியேறலாம். (குறுக்கீடு) அவை நடவடிக்கைக்குக் குந்தகம் செய்யும் திரு. குமாரதாஸ் அவையை விட்டு வெளியேற உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு) மார்ஷல், திரு. குமாரதாஸை வெளியேற்றவும். திரு. குமாரதாஸை அவையை விட்டு அப்புறப்படுத்தவும்.

(திரு. குமாரதாஸ் அவையில் இருந்து பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம்.

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஞானசேகரன், உங்களுக்கு எழுத்து மூலமாக, நீங்கள் பேசுகிறபோது பேசலாம் என்று கொடுத்து இருக்கிறேன். (குறுக்கீடு) எழுத்து மூலமாக நான் உங்களுக்குக் கொடுத்து இருக்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன் : ஸ்பீக்கர் சார், மிக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை.

திரு. கு. லாரன்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர், மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரதாஸ்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது. அவரை நான் வெளியேற்றிவிட்டேன். எனவே அதுபற்றிப் பேச வேண்டாம். அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது, உட்காருங்கள்.

4. கவன ஈர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து கவன ஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை நான் வலியுறுத்தவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. சிங்காரம் தன்னுடைய தீர்மானத்தை வற்புறுத்தாத காரணத்தால் பேரவையின் ஒப்புதலோடு அது திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டங்களின் காவேரி பாசன நெற்பயிர்களைப் பாதுகாக்க மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடவேண்டியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து கவன ஈர்ப்பு. திருவாளர்கள் கு. தங்கமுத்து, கு. சீனிவாசன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கு. தங்கமுத்து.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், நாகை-காயிதே மில்லத் மாவட்டம் போன்ற பகுதிகள் காவேரி, கல்லணைக் கால்வாய் வடவாறு பாசனப் பகுதிகளில் மற்றும் வெண்ணாறு, வெட்டாறு போன்ற பாசனப் பகுதிகளில் நெல் தாளடிப்பயிர் தண்ணீர் தட்டுப்பாட்டால் காய்ந்துவிடும் நிலை உள்ளதால் அதற்கு ஒரு முறை தண்ணீர்ப் பாசனம் தரும் மேட்டூரிலிருந்து குறைந்த பட்சம் 10 தினங்களுக்காவது பாசனம் தரும் வகையில் தண்ணீரைத் திறந்துவிட வேண்டும் என்ற கவன ஈர்ப்புத் தீர்மானத்தை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வந்து....